## இஸ்லாமியக் கலாச்சாரத்தில் குடும்ப அமைப்பு

குடும்பம் மட்டுமே அதன் வரையறைக்குட்பட்டவர்களைப் பாதுகாக்கின்றது. ஒரு மனிதன் அவனுக்குப் பின்பலமாக எப்போதுமே பாதுகாப்பளித்துக்கொண்டிருக்கும் ஒரு குடும்பம் இல்லாதவரையில் வலுவானவனாகவோ உறுதியானவனாகவோ இருக்கமுடியாது. இஸ்லாமியப் பார்வையில் ஒரு குடும்பம் என்பது அல்லாஹ்வின் கட்டளைக்ளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் குடும்பமாகும் மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவன் காட்டிய வழியில் நடக்கும் குடும்பம்தான் அவனுடைய சமுதாய வளர்ச்சிக்கான ஏணியின் முதன் முதலான படிக்கட்டுமாகும்.

### இஸ்லாமியக் குடும்பக் கட்டமைப்பில் திருமணத்தின் அடிப்படைப்பங்கீடு

திருமணம் மட்டுமே இஸ்லாமியக் குடும்பத்தின் கட்டமைப்புக்கான மிகச் சரியான மற்றும் சட்டப்பூர்வமான வழியாகும். இஸ்லாம் திருமணம் செய்து கொள்வதை மிகவும் வலியுறுத்தி ஊக்குவிக்கின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

وَمِنْ ءَايَٰتِهِۦٓ أَنْ خَلَقَ لَكُم مِّنْ أَنفُسِكُمْ أَزْوَٰجًا لِّتَسْكُنُوٓا۟ إِلَيْهَا وَجَعَلَ بَيْنَكُم مَّوَدَّةً وَرَحْمَةً ۚ إِنَّ
فِى ذَٰلِكَ لَءَايَٰتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ ﴿٢١﴾ (الروم: 21)

*பொருள்: மேலும், அவனுடைய சான்றுகளில் இதவும் ஒன்றாகும். அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான், நீங்கள் அவர்களிடம் அமைதி பெறவேண்டும் என்பதற்காக. மேலும், உங்களிடையே அன்பையும் கருணையையும் தோற்றுவித்தான். திண்ணமாக, சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறையச் சான்றுகள் உள்ளன (அர்ரூம்:21)*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

يَا مَعْشَرَ الشَّبَابِ مَنِ اسْتَطَاعَ مِنْكُمُ البَاءَةَ فَلْيَتَزَوَّجْ، وَمَنْ لَمْ يَسْتَطِعْ فَعَلَيْهِ بِالصَّوْمِ فَإِنَّهُ لَهُ وِجَاءٌ
(البخاري، مسلم)

*பொருள்: வாலிபர்களே, உங்களில் எவருக்கு நிகாஹ் (திருமணம்) செய்து கொள்ளும் ஆற்றல் உள்ளதோ அவர்கள் நிகாஹ் செய்துகொள்ளவேண்டும், ஏனெனில், நிகாஹ் செய்துகொள்வது பார்வையை காத்துக்கொள்வதும் மர்ம உறுப்புக்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதுமாகும். எவருக்கு இதற்கான ஆற்றல் இல்லையோ, அவர்கள் நோன்பு நோற்பதைக் கட்டாய*

www.uzairfalahi.com

மானதாக ஆக்கிக்கொள்ளவேண்டும், ஏனெனில், நோன்பு இவ்விஷயத்தில் தவறுகளிலிருந்து பாதுகாக்கும் கேடயமாகும் (புக்ஹாரி, முஸ்லிம்).

திருமணம் செய்துகொள்வதில் எண்ணற்ற நன்மைகள் உள்ளன:

1 திருமணம் மனித இனம் தொடர்ந்து நிலைத்திருப்பதற்காகவும் அதன் பாதுகாப்பிற்காகவும் அனுமதிக்கப்பட்ட வழிமுறையாகும், மனித இனம் (பூமியில்) நிலைத்திருப்பதற்காகவே பூமியை செழுமையாக்கி வைத்திருக்கின்றான் மற்றும் அதன்மீது தன்னுடைய கருணை வடிவான மழையைப் பொழிவிக்கின்றான்.

2 பரம்பரை மரபுவழியில் குழப்பம் ஏற்படுவதிலிருந்து தடுக்கின்றது, ஏனெனில், பரம்பரை மரபின் அடிப்படை மற்ற உரிமைகள் நிலை நாட்டப்படுவதற்கும் ஆதாரமாக விளங்குகின்றது, உதாரணமாக, வாரிசுகள், திருமண உறவுகள் மற்றும் தடுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட உறவுமுறைகளை நிர்ணயித்துக்காட்டுகின்றது.

3 திருமணம் சமுதாயத்தினரை கற்பை விலைபேசுதல், விபச்சாரம், ஓரினச்சேர்க்கை மற்றும் இவ்வகையான மற்ற தீய காரியங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது, ஏனெனில், இந்தத் தீமையான காரியங்கள் சமுதாயத்ததையே சீரழித்துவிடுகின்றன.

4 திருமணம் ஒரு மனிதனுடைய இயல்பான இயற்கையான தேவையாகும். அதிலிருந்து விலகிச்செல்வது அல்லது தவிர்ப்பது இயற்கைக்கு மாற்றமான செயலாகும்.

www.uzaifalahi.com

திருமணத்திற்கான இன்றியமையாத குறிக்கோள் ஒருவர் உண்மையாகவே இதற்கான எண்ணத்தைக் கொண்டிருந்து, கணவர் என்ற வகையில் மனைவியின் தேவைகள், செலவுகளை ஏற்கும் ஆற்றல் பெற்றிருக்கும் நிலையில் தான் பூர்த்தியாகின்றது. ஒரு முஸ்லிமிடத்தில் திருமணத்திற்கான நோக்கம் எதுவாக இருக்கும் என்றால், அவன் தன்னையே தூய்மையானவனாக வைத்துக்கொள்ளவேண்டும், தன்னுடைய மர்ம உறுப்புக்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவேண்டும், அத்துடன் முஸ்லிம் சமுதாயத்தினர் எண்ணிக்கையில் கூடிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதாகும். இதனால் தான், முஸ்லிம்கள் அவர்களுடைய எண்ணத்தைச் சீரானதாக அமைத்துக் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

وَفِي بُضْعِ أَحَدِكُمْ صَدَقَةٌ قَالُوا: يَا رَسُولَ اللهِ أَيَأْتِي أَحَدُنَا شَهْوَتَهُ وَيَكُونُ لَهُ فِيهَا أَجْرٌ؟ قَالَ: أَرَأَيْتُمْ لَوْ وَضَعَهَا فِي حَرَامٍ أَكَانَ عَلَيْهِ وِزْرٌ؟ فَكَذَلِكَ إِذَا وَضَعَهَا فِي الْحَلَالِ كَانَ لَهُ أَجْرٌ (مسلم)

*பொருள்: ஒரு மனிதருடைய உடலின் ஒவ்வொரு அங்கத்திற்காகவும் ஸதகா உண்டு, மக்கள் கேட்டார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களே, நம்மில் எவரும் தன்னுடைய உடலின் ஒரு அங்கத்தினைக்கொண்டு தன்னுடைய இச்சைகளைப் பூர்த்தி செய்துகொள்கின்றான், இதிலும் (அதாவது தன்னுடைய மனைவியுடன் உடலுறவு கொண்டாலும்) அவனுக்கு நன்மை உண்டா? இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், ஏன் கிடைக்காது? அவன் ஹராமான தடுக்கப்பட்ட வழிகளில் அதனை அனுபவிக்க முயற்சிப்பானேயானால் அவனுக்குத் தண்டனை உண்டா இல்லையா? அவ்வாறே, அவன் ஹலாலான அனுமதிக்கப்பட்ட வழியில் செய்யும்போது அவனுக்கு நன்மையும் உண்டு.*

இஸ்லாம் திருமணத்தின் மூலம் நாடப்படும் குறிக்கோள் அடைவதற்காக எண்ணற்ற அடிப்படைகள் மற்றும் விதிகளை நிர்ணயித்துள்ளது. அவற்றுள் சில கீழ்வருமாறு:

**திருமணத்திற்கு முன்பு விருப்பத்தை தெரிவித்தல் (நிச்சயம் செய்தல்)**

திருமணத்திற்கான விருப்பம் தெரிவிப்பது, திருமணம் செய்துகொள்வதாக அளிக்கப்படும் வாக்குறுதி போன்றதாகும். இஸ்லாமிய மார்க்கத்தில் திருமணம் செய்யவிருக்கும் ஒருவர் திருமணத்திற்கு முன்பே வெளிப்படையாகவே அனைத்து விஷயங்களும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக தனது மனைவியாக வரப்போகும் பெண்ணை ஒரு முறை பார்ப்பதை அனுமதித்துள்ளது.

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

انْظُرْ إِلَيْهَا، فَإِنَّهُ أَحْرَى أَنْ يُؤْدَمَ بَيْنَكُمَا (الترمذ1ي، النسائي، ابن ماجه)

*பொருள்: அவளைப் பார்த்துக்கொள்ளலாம், இது உங்களுக்கிடையே அன்பும் பாசமும் நிலைத்திருப்பதற்கு மிகவும் பொருத்தமான ஒன்றாகும் (திர்மிதி, நிசாயி, இப்னு மாஜா).*

ஆனால், ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும், நிச்சயம் செய்வதற்கு முன்பாக ஹராமானதாக இருந்த ஒன்று அதன்பின் ஹலாலானதாக ஆகிவிடுவதில்லை. அகவே, இவர்கள் அந்நியர்களைப்போன்றே

www.uzairfalahi.com

விலகி இருக்கவேண்டும். நிச்சயம் செய்துகொண்ட ஒருவர் தாம் நிச்சயம் செய்துகொண்ட பெண்ணோடு தனிமையில் சந்திப்பதோ, திருமணம் செய்துகொள்வது ஹராமான ஒரு நெருங்கிய உறவினர் உடனில்லாத நிலையில் அவளோடு பயணம் மேற்கொள்வதோ அனுமதிக்கப்பட்ட தல்ல. மேலும், எந்த ஒரு மனிதரும் தன்னுடைய சகோதரர் திருமண விருப் பத்தைத் தெரிவித்துள்ள அந்தப் பெண்ணுக்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவிக்கக்கூடாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

وَلاَ يَخْطُبَ الرَّجُلُ عَلَى خِطْبَةِ أَخِيهِ، حَتَّى يَتْرُكَ الخَاطِبُ قَبْلَهُ أَوْ يَأْذَنَ لَهُ الخَاطِبُ البخاري، مسلم )

*பொருள்: எந்த ஒரு மனிதரும் தன்னுடைய சகோதரர் திருமண விருப் பத்தைத் தெரிவித்திருக்கும் நிலையில், தனக்கு முன்பாக அவர் அந்த எண் ணத்தை விட்டுவிடவோ அல்லது அவரே அனுமதிக்காத வரையில் அந்தப் பெண்ணுக்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவிக்கவோ கூடாது. (புக்ஹாரி, முஸ்லிம்).*

ஒருவர் ஒரு பெண்ணுக்குத் தன்னுடைய திருமண விருப்பத்தைத் தெரிவித் திருந்து, பெண் வீட்டார் எந்த பதிலும் அவருக்கு கூறாமலிருக்கும் நிலை யில், மற்ற ஒருவர் இதனை அறிந்திராது தன்னுடைய விருப்பத்தைத் தெரி வித்து, பெண்வீட்டாரும் இதற்கான ஒப்புதல் அளித்துவிட்டால் அதில் தவறு ஏதுமில்லை. ஒருவர் திருமண விருப்பத்தைத் தெரிவித்திருக்கும் செய் தியை இரகசியமாக வைத்திருப்பது குழப்பவாதிகள் இதனைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்ற வகையில் அது சிறந்தாகும். சில சம யங்களில் அல்லாஹ்வின் தவ்ஃபீஃக் எனப்படும் உதவி இல்லாது போகும் அடிப்படையில், இந்த இருவர்களில் ஒவ்வொருவருமே அவர்களுடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டுவிடுவார்கள். இதன் காரணமாக, அந்தப் பெண் வேதனைப்படலாம். ஆனால், நிகாஹ்வை நிறைவேற்று வது வேறு விஷயமாகும், ஏனெனில், இதில் அதற்கான அறிவிப்பு செய் யப்படவேண்டும் மற்றும் இரண்டு சாட்சிகள் இருப்பது கட்டாயமான தாகும்.

## மனைவியைத் தேர்ந்தெடுத்தல்

இஸ்லாம் வாலிபர்களுக்குத் தங்களுடைய மனைவியைத் தேர்ந்தெடுக்கும் நிலையில் சில நிபந்தனைகளைக் கருத்தில் கொள்ளுமாறுபோதிக்கின்றது.

**பேணுதலான மார்க்கப்பற்று** இறைத்தூதர் ﷺ அவர்கள் மார்க்கப்பற்றுள்ள, இஸ்லாமியப் போதனைகள் மற்றும் ஒழுக்கங்களைப் பேணும் ஒரு பெண்

www.uzairfalahi.com

ணைத் தேர்ந்தெடுக்குமாறு ஊக்குவிக்கின்றார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

**تُنْكَحُ الْمَرْأَةُ لِأَرْبَعٍ : لِمَالِهَا وَلِحَسَبِهَا وَجَمَالِهَا وَلِدِينِهَا، فَاظْفَرْ بِذَاتِ الدِّينِ، تَرِبَتْ يَدَاكَ البخاري، مسلـ )**

பொருள்: ஒரு பெண் நான்கு விஷயங்களுக்காகத் திருமணம் செய்து கொள்ளப்படவேண்டும்,அவளுடைய செல்வத்திற்காக,அவளுடைய குடும்பக் கண்ணியத்திற்காக, அவளுடைய அழகிற்காக மற்றும் அவளுடைய மார்க்கப்பற்றுக்காக. இருப்பினும், நீ மார்க்கப்பற்றுடையவளையே பெற்றுக்கொள்ளவேண்டும், இதனை நீ ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் உன்னுடைய இரு கைகளும் சேற்றினால் அழுக்கேறிவிடட்டும் (புக்ஹாரி, முஸ்லிம்).

**நல்லொழுக்கம்** சில நற்பண்புகள் குழந்தைகளுக்கு மரபு வழியாக, வாரிசுப் பொருளாகவே கிடைக்கப்பெறுகின்றன என்ற உண்மை யாருக்கும மறைந்திருக்கவில்லை. அவ்வாறே, சில பண்புகள் வளர்ப்பின் மூலம் உண்டாக்கப்படுகின்றன. ஆகவே, ஷரீஅத் சட்டங்களைப் பேணுதலாகக் கடைபிடிக்கும் ஒரு குடும்பம் தங்களுடைய மக்களை நற்பண்புகள் மற்றும் மார்க்கச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வகையில் நெறிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

**கன்னிப்பெண்களை மணந்துகொள்ளுதல்** ஹஜ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் என்னிடம் கேட்டார்கள், நீர் திருமணம் செய்துகொண்டீரா? நான் கூறினேன், ஆம் ஒரு விதவைப் பெண்ணை மணந்துகொண்டேன். அவர்கள் ﷺ கூறினார்கள், கன்னிப்பெண்ணை ஏன் மணந்துகொள்ளவில்லை, அவளுடன் நீர் களியாடிக்கொண்டிருக்கலாமே. நான் கூறினேன், என்னுடைய தந்தை உஹது போரில் ஷஹீதாகிவிட்டார்கள், அவருக்கு ஒன்பது மகள்கள் உள்ளனர். ஆகவேதான், அவர்களுக்குத் துணையாக இருக்கும் வகையிலும் அவர்களைச் சீர்த்திருத்தி வளர்க்கும் வகையிலும் நான் என்னுடைய சகோதரிகளுடைய வயதிலுள்ள பெண்ணை மணந்துகொள்ளவில்லை. அதன்பின் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், அல்லாஹ் உங்களுக்கு பரக்கத் எனும் நற்பேறு அளிப்பானாக (புக்ஹாரி, முஸ்லிம்).

இஸ்லாம் கன்னிப்பெண்களை மணந்துகொள்ளுமாறு ஊக்குவித்துள்ள போதிலும் அதனைக் கடமையாகவே ஆக்கிவிடவில்லை. சில நிலைகளில், மேற்கூறப்பட்ட ஹஜ்ரத் ஜாபிர் (ர) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழி

www.uzairfalahi.com

யில் கூறப்பட்டுள்ளது போன்று விதவைகளை மணப்பது கன்னிப்பெண் களை மணப்பதின்மீது முன்னுரிமையும் அளிக்கப்பட்டுள்ளது.

**அதிக குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெண்ணுடன் திருமணம் செய்துகொள் ளுதல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

تَزَوَّجُوا الْوَدُودَ الْوَلُودَ فَإِنِّي مُكَاثِرٌ بِكُمُ الْأُمَمَ ( النسائي )

பொருள்: பாசமுள்ள அதிக மக்களைப் பெற்றெடுக்கும் தன்மையுள்ள பெண்களுடன் திருமணம் செய்துகொள்ளுங்கள், ஏனெனில். உங்களுடைய அதிக எண்ணிக்கையின் அடிப்படையில் மறுமை நாளன்று நான் மற்ற நபிமார்கள்மீது பெருமை கொண்டாடுவேன் (அபூ தாவூத்). இஸ்லாத்தின் மகத்துவம் மற்றும் அதன் கருணைகாட்டும் பண்பின் அடிப்படையில் இஸ்லாம் அதிகமான அன்பு மற்றும் பாசம் காட்டும் பெண்களையும் அதிக மக்களைப் பெற்றெடுக்கும் பெண்களையும் மணந்துகொள்ளும்படி அறிவுறுத்தினாலும், மற்றப் பெண்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு கட்டளையிடுகின்றனது. ஏனெனில், அல்லாஹ் தஆலா அவர்களுக்காக விதித்துள்ளவற்றில் அவர்களுடைய குறையோ தவறோ ஏதுமில்லை. அவர்களுக்கு விதிக்கப்படாத, கிடைக்காத விஷயங்களை விடவும் சிறந்து சில பண்புகள் அவர்களிடம் அதிகமாகவே இருக்கவும் செய்யலாம்.

**கணவனைத் தேர்ந்தெடுத்தல்**

இஸ்லாம் மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் கணவனுக்கு சில அடிப்படை கள் மற்றும் விதிளை நிர்ணயித்தள்ளதுபோன்றே பெண்களுக்கும் தங்க ளுக்கான கணவர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் சில அடிப்படைகள் மற்றும் விதிளை நிர்ணயித்துள்ளது. பெண்களுக்கும் தேவையான இந்தப் பண்புகள் அனைத்துமே ஆண்களிலும் பெறப்படவேண்டும், அவற்றுள் சில கீழ்வருமாறு:

- **மார்க்கப்பற்றுடையவர்களாக இருக்கவேண்டும்**
- **நல்லொழுக்கமும் அமானிதப்பண்புமுடையவர்களாக இருக்கவேண்டும்**
- **பொறுப்பேற்கும் ஆற்றலுடையவர்களாக இருக்கவேண்டும்**

இந்த நன்மையான அம்சங்கள் அனைத்துமே நபிமொழியின் மூலம் அறிய முடிகின்றது, இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

www.uzairalahi.com

إِذَا جَاءَكُمْ مَنْ تَرْضَوْنَ دِينَهُ وَخُلُقَهُ فَأَنْكِحُوهُ، إِلَّا تَفْعَلُوا تَكُنْ فِتْنَةٌ فِي الأَرْضِ وَفَسَادٌ

பொருள்: *எவருடைய மார்க்கப்பற்று உங்களுக்குப் பிடித்திருக்கும் ஒருவரிடமிருந்து திருமண விருப்ப அழைப்பு உங்களிடம் வருமானால் அவருக்குத் திருமணம் செய்துகொடுங்கள், இவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால் பூமியில் குழப்பங்களே பரவிவிடும் (திர்மிதி)*

خَطَبَ أَبُو بَكْرٍ، وَعُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُمَا فَاطِمَةَ، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «إِنَّهَا صَغِيرَةٌ» فَخَطَبَهَا عَلِيٌّ، فَزَوَّجَهَا مِنْهُ

பொருள்: *ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் ஹஜ்ரத் ஃபாதிமா (ர) அவர்களை மணந்துகொள்ள விரும்புவதாகத் தன் விருப்பத்தைத் தெரிவித்தார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் ஃபாதிமா (ர) அவர்களுக்கு வயது குறைந்ததாக உள்ளதே என்று கூறினார்கள். அதன்பின் ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் தாங்கள் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகத் தன் விருப்பத்தைத் தெரிவித்தார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய மகளை அவர்களுக்கே திருமணம் செய்துகொடுத்தார்கள்.*

* * *

www.uzairfalahi.com